
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1190

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

62

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

# கண்ணியமிகு காயிதே மில்லத்தும் கழகமும்!

“முஸ்லிம் லீக்குக்கும் எங்களுக்கும் உள்ள உறவு, ஏதோ பதவிக்காக ஏற்பட்டதல்ல. நாங்கள் அமைச்சர்கள் என்பதற்காக அவர்கள் எங்களுடன் உறவு கொண்டாடவில்லை. எங்களுக்குள் ஏற்பட்ட உறவு, கொள்கை அடிப்படையில் ஏற்பட்ட உறவாகும். அந்த உறவு நெருங்கிய உறவு. நெடுங்காலமாக இருந்து வரும் உறவு. நெடுங்காலத்திற்குப் பிறகும் நிலைத்து நிற்கும் உறவு. தி.மு. கழகத்திற்கு உற்றத் துணைவனாக, ஜனநாயகத்திற்குக் கிடைத்த அறப்போர் வாளாக, கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்கள் இருந்துவருகிறார்.”

19.05.1967 அன்று முதன்முறையாகக் கழக அரசு அமைந்தபோது, சேலத்தில் முஸ்லிம் லீக் சார்பாக நடைபெற்ற பாராட்டு விழாவில், பேரறிஞர் அண்ணா கூறிய கருத்துகள் இவை.

அண்ணா கூறியதுபோலவே, தேர்தலுக்காகவும் ஆட்சிக்காகவும் மட்டுமே பிணைந்த நட்பு அல்ல இது. காயிதே மில்லத் மீது கழகம் கொண்டிருந்த அன்பு, அதற்கு முன்பும் மிக நீண்ட வரலாற்றைக் கொண்டது. 30-07-1962 அன்று, காஞ்சிபுரம் ஒலிமுஹம்மது பேட்டையில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் அண்ணா பேசும்போது, “தமிழகத்தின் அரசியல் வானில் கப்பியிருக்கிற காரிருளை அகற்ற வந்த ஒளிக்கதிராக, காயிதே மில்லத் முஹம்மது இஸ்மாயில் சாஹிப் அவர்கள் இருக்கிறார்கள்” என்று அந்த அன்பை அப்போதே வெளிப்படுத்தியிருந்தார்.

கழகம் தமிழ்நாட்டுக்கு வகுத்தளித்த இருமொழிக் கொள்கையில், அரசியல் நிர்ணய சபை உறுப்பினராக இருந்தபோதே உறுதிகாட்டியவர் காயிதே மில்லத். “ஆங்கில மொழி இப்பொழுது வந்த மொழி; நம்முடைய புராதன மொழி வேண்டாமா?” என்று அரசியல் நிர்ணய சபையில் சிலர் கேள்வி எழுப்பியபோது, “புராதன மொழியிலே ஒன்றை எடுத்துத்தான் ஆட்சி மொழியாக்க வேண்டுமென்றால், நான் தைரியமாகச் சொல்கிறேன். தமிழ்மொழி உள்ளிட்ட திராவிட மொழிகள்தான் இந்த மண்ணிலே முதன்முதலாகப் பேசப்பட்ட மொழிகள். இது என்னுடைய தாய்மொழி. தமிழை ஏன் ஆட்சி மொழியாக்கக் கூடாது?” என்று கேள்வி கேட்டார் காயிதே மில்லத்.

13.10.1963 அன்று சென்னையில் நடைபெற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்புக் கூட்டத்தில், காயிதே மில்லத்தின் அந்த உரையை வாசித்துக் காட்டினார் அண்ணா.

1962-ஆம் ஆண்டு தேர்தலில் தி.மு. கழகத்திற்கு காயிதே மில்லத் ஆதரவு கொடுத்தது தொடர்பாக, நாடாளுமன்றத்தில் பேசும்போது கருத்து தெரிவித்த லால் பகதூர் சாஸ்திரி, “என் நண்பர் இஸ்மாயில் ஸாஹிப் தி.மு.க.வுக்காக ஊர் ஊராகச் சென்று பிரச்சாரம் செய்தார் என்று கேள்விப்பட்டு வருந்தினேன்” என்றார். “ஆதரவு தருவது என்று முடிவு செய்த பிறகு, பிரச்சாரத்திற்குப் போகாமல் இருக்க முடியுமா?” என்று அப்போதே பதிலடி கொடுத்தார் காயிதே மில்லத். ‘இப்படிப்பட்ட கனிந்த இதயமுடையோரின் கூட்டுறவைப் பெற்றோம் என்பதில் நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன்’ என்று அப்போது பெங்களூருவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போது கூறினார் அண்ணா.

### அண்ணாவுக்குப் பின்னர்...

அண்ணாவின் மறைவுக்குப் பின்பும் அத்தகைய கொள்கை உறவான காயிதே மில்லத் அவர்களுடன் அதே நட்பையும் உறவையும் பேணிக்காத்து, தமிழ்நாட்டை சமூக



நல்லிணக்க மண்ணாக நிலைக்கச் செய்தவர் முத்தமிழறிஞர். 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் 5 அன்று காயிதே மில்லத் மறைந்த பின்பும், அந்த அன்பின் ஆழத்தை வெளிப்படுத்தும் பல திட்டங்களைத் தீட்டினார் கலைஞர். குறிப்பாக, சென்னை அண்ணா சாலை கன்னிமாரா ஹோட்டல் சந்திப்பில் இயங்கி வந்த அரசு பெண்கள் கல்லூரிக்கு, 5.6.1974 அன்று ‘காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி’ எனப் பெயர் சூட்டினார். செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குப் பின்புறம் அண்ணா சாலையை நோக்கி செல்லும் பாதையின் தொடக்கத்தில் உள்ள பாலத்திற்கு ‘காயிதே மில்லத் பாலம்’ எனப் பெயர் சூட்டினார். கி.பி. 1715-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட இப்பாலத்தின் முந்தைய பெயர், வாலாஜா பாலம். சென்னை மேடவாக்கத்தில் முஸ்லிம் கல்வி, கலாச்சார டிரஸ்ட் சார்பில் காயிதே மில்லத் ஆண்கள் கல்லூரி 1975-ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. இந்தக் கல்லூரிக்கென 40 ஏக்கர் நிலத்தை வழங்கினார் கலைஞர்.

1985-ஆம் ஆண்டு, மதுரையில் இருந்து திண்டுக்கல்லை தனி மாவட்டமாகப் பிரித்த எம்.ஜி.ஆர்., ‘அண்ணா மாவட்டம்’ என்று பெயர் சூட்டினார். பிறகு கலைஞர் அவர்கள், ‘காயிதே மில்லத் மாவட்டம்’ என்று பெயர் மாற்றினார். ஆனால், இந்து முன்னணிக்கு இந்தப் பெயர் மிகுந்த உறுத்தலைத் தந்தது. 1990-ஆம் ஆண்டு மார்ச் 20 அன்று, திண்டுக்கல் நகரில் இதற்கெதிரான ஊர்வலத்தை நடத்தியது அந்த அமைப்பு. காவல் துறையின் பலத்த பாதுகாப்பையும் மீறி கலவரத்தில் முடிந்த அந்த ஊர்வலத்தில், சுமார் 50 பேர் காயமடைந்தனர். 29.3.1990 அன்று, திண்டுக்கல் சம்பவம் குறித்து சட்டசபையில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இதற்குப் பதிலளித்துப் பேசிய அன்றைய முதலமைச்சர் கலைஞர், அந்தப் பெயரை மாற்ற மறுத்தார்.

“திண்டுக்கல்லைத் தலைநகரமாகக் கொண்ட பகுதிக்கு காயிதே மில்லத் பெயரை வைக்காமல் வேறு மாவட்டத்திற்கு வைத்தால், இந்து முன்னணியினர் ஏற்றுக்கொள்வார்களா?” என்று சட்டசபையில் கேள்வி எழுப்பினார் கலைஞர். அதுமட்டுமல்ல, இந்து முன்னணி அமைப்பாளர் இராம.கோபாலன் அப்போது அளித்த ஒரு பேட்டியில், ‘திண்டுக்கல்லுக்கு முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த வேறு யாருடைய பெயரையும் வைப்பதை இந்து முன்னணி எதிர்க்கவில்லை. தேசப்பிரிவினைக்குக் காரணமாக இருந்தவரின் பெயரைச் சூட்டுவதைத்தான் எதிர்க்கிறோம்’ என்று விசித்திரமான கருத்தைக் கூறினார்.

‘காயிதே மில்லத் ஒரு தேசத்துரோகி என்று அடையாளம் காட்டி, அந்தப் பெயரை வைக்கக்கூடாது?’ என்று சொல்வதை எண்ணிப்பார்க்க வேண்டும். இதில் உள்நோக்கம் இருக்கிறது. இதுவரையில் தந்தை பெரியாரால், பேரறிஞர் அண்ணாவால், பெருந்தலைவர் காமராஜரால், கண்ணியத் திற்குரிய காயிதே மில்லத் அவர்களால் தொடர்ந்து அவர்கள் வழி வந்தவர்களால் கட்டிக் காப்பாற்றப்பட்டு வருகிற, இந்த மதவாத சண்டையிலிருந்து விடுபட்ட மாநிலம் என்ற ஒரு நிலையை மாற்றுவதற்காக, இந்து முன்னணியினர் இன்றைக்குத் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதை நாம் எண்ணிப்பார்க்காமல் இருக்க முடியவில்லை.

அவர்களுடைய கூற்றுப்படி, காயிதே மில்லத் தேசத்துரோகியா? என்றால் இல்லை. பாகிஸ்தான் பிரிக்கப்பட வேண்டும் என்று கருத்தைச் சொன்னவர்கள் எல்லாம் தேசத் துரோகிகள் என்றால், ‘பாகிஸ்தானைப் பிரித்துக் கொடுத்துவிடுங்கள், நிம்மதியாக இருக்கலாம்’ என்று சொன்னவர் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்’ என சட்டமன்றத்தில் பதிலடி கொடுத்தார் கலைஞர்.

> கலைஞர், அவருக்காக காயிதே மில்லத் கல்லூரி வளாகத்தில் மணிமண்டபம் கட்ட எண்ணி, 1996-2001 கழக ஆட்சியில் கட்டியும் முடித்தார்.

அந்த அளவுக்கு காயிதே மில்லத் மீது பற்றும், முஸ்லிம் லீக்குடன் உறவும் கொண்டிருந்த கலைஞர், அவருக்காக காயிதே மில்லத் கல்லூரி வளாகத்தில் மணிமண்டபம் கட்ட எண்ணி, 1996-2001 கழக ஆட்சியில் கட்டியும் முடித்தார். ஆனால், கட்டி முடிக்கப்பட்ட சமயத்தில் தேர்தல் நடத்தைகள் அமலுக்கு வந்துவிட்டதால், திறப்பு விழா காண காத்திருக்க வேண்டியதானது. அந்தத் தேர்தலில் கழகம் எதிர்க்கட்சி ஆகிவிட்ட நிலையில், ஆட்சிக்கு வந்த அம்மையார் ஜெயலலிதாவோ கிடப்பிலே போட்டு காலம் தாழ்த்தினார். கழகத்தின் எதிர்ப்புகளுக்குப் பிறகு, இரண்டு ஆண்டுகள் கழித்துதான் மணிமண்டபம் திறக்கப்பட்டது.

...நீளும்

## தலைவர் வழிநடத்துவார்... கண்ணியம் காப்போம்!

தி.மு.க. அப்படி செய்திருக்கலாம், தி.மு.க. இப்படி செய்திருக்கலாம் எனப் பொதுவெளியில் கருத்து சொல்வதைவிட, எங்கே தவறு நடந்தது, எதை நாம் கவனிக்கத் தவறிவிட்டோம் எனத் தலைவர் அழைத்துக் கேட்கும்போது பேசலாம். அதுவரை கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் நடந்துகொள்வோம் எனக் கருத்துப் பகிர்ந்துள்ளார், முகநூல் பதிவர் அபி அப்பா தொல்காப்பியன். அவரது பதிவிலிருந்து...

“60 ஆண்டுக்காலமாய் அரசியலில் உழன்று உழன்று சுவாசமே அரசியலாய், தன் தாயின் கருவறையில் இருந்தபோதே, தலைவர் கலைஞரிடம் அரசியல் கற்க ஆரம்பித்தவரை, கலைஞர் மடியில் அமர்ந்து அரசியல் பயில ஆரம்பித்தவரை, கலைஞரின் கரம்பிடித்து நடந்தபோதே அரசியல்வாதியாய் இருந்தவரை, சிறுவனாய்க் கருப்பு சிவப்பு பேப்பர் கொடியை, ஈர்க்குச்சியில் ஒட்டிக்கொண்டு வீதியில் இறங்கி அரசியல் செய்ய ஆரம்பித்தவரை, வாலிபனாய் ஆட்டோவில் தொத்திக்கொண்டு, ‘இதோ தலைவர் வருகின்றார் உங்களிடம் வாக்குகேட்டு...’ எனக் கலைஞருக்குக் கட்டியம் கூறிய தொண்டனாய் அரசியல் செய்தவரை, சலூன் கடையில் அமர்ந்து கொண்டு, கட்சியில் இளைஞர் கூட்டத்தைக் கூட்டியவரை, தன் சகாக்களைச் சேர்த்துக்கொண்டு ஊர் ஊராய்ச் சென்று பிரச்சார நாடகம் நடத்திய அரசியல்வாதியை, எமர்ஜென்சியில் சிறைக்குச் சென்ற புதுமாப்பிள்ளை அரசியல்வாதியை, பொதுக்குழு உறுப்பினர், இளைஞர் அணி அமைப்பாளர் என வளர்ந்த ஓர் அரசியல்வாதியை, எம்.எல்.ஏ. தேர்தலில் முதன்முறையாக ஆயிரம் விளக்கு தொகுதியில் எம்.ஜி.ஆர். அசுரபலத்துடன் இருந்தபோது, அரசியல் ஜாம்பவானாக இருந்த கே.ஏ.கிருஷ்ணசாமியை எதிர்த்து நின்று அரசியல் செய்தவரை,

பின்னர் எம்.எல்.ஏ, சென்னை மேயர், அமைச்சர், துணை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், முதலமைச்சர் என அரசியல் வாழ்வில் ஜொலித்தவரை, கலைஞர் மறைந்தநிலையில் எவ்வித அசம்பாவிதமும் இல்லாமல் சென்னையையும் தன் தொண்டர்களையும் காத்து நின்றவரை... இதோ இன்றைக்கு கொளத்தூர் தொகுதி மக்கள் தோற்கடித்துவிட்டனர் என்கிற நிலையிலும் கொஞ்சமும் முடங்கிவிடாமல் அறிவாலயம் வந்து, ‘அடுத்து என்ன செய்யலாம்?’ என சிலிர்த்துக்கொண்டு நிற்கும் சிங்கத்துக்கு, இலவச ஆலோசனை பொதுவெளியில் சொல்வதா?” என்று பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### மாநில உணர்வுக் காலங்கள்!



காரைக்குடி நா.கிருஷ்ணமூர்த்தி

1973-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 25 மற்றும் 26 தேதிகளில், மதுரையில் மாநில சுயாட்சி மாநாட்டினை நடத்தினார், அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். மேடையில், ‘எல்லைப் போராட்ட வீரர்’ ம.பொ.சி. உரையாற்றுகிறார். கலைஞருடன் மூக்கையா தேவர் எம்.பி., நாடகக் கலைஞர் டி.கே.பகவதி ஆகியோர். அப்போது, தமிழரசுக் கழகத்தில் ம.பொ.சி.யுடன் இயங்கிக்கொண்டிருந்த நான், மேடையின் பின்புறமாக நின்றுகொண்டிருந்தேன். அது மறக்க முடியாத காலம்.

**– காரைக்குடி நா.கிருஷ்ணமூர்த்தி,**
**மாநில சுயாட்சி, எல்லைப் போராட்ட வீரர்,**
**ஜெய்ஹிந்த்புரம், மதுரை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### பெரியார்-அண்ணா வடநாட்டுப் பயணம்!

1941-இல் சேலம் விக்டோரியா மார்க்கெட்டில் நடந்த பொதுக்கூட்டத்தில், பெரியாருடன் வட நாட்டுத் தலைவர் எம்.என்.ராய் கலந்துகொண்டார். அதே ஆண்டு அக்டோபர் 8 முதல் நவம்பர் 16 வரை 39 நாட்கள், பெரியார் வடநாட்டுப் பயணம் மேற்கொண்டார். இந்தப் பயணத்தில் பெரியாரின் அழைப்பின் பேரில், அண்ணாவும் 29 நாட்கள் கலந்துகொண்டார். இச்சுற்றுப்பயணத்தில் எம்.என்.ராய் ஏற்பாடு செய்த கூட்டங்களில்தான் பெரியார் அதிக நாட்கள் கலந்துகொண்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900